**ARTICLE 55 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00061**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 11–14
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல்

**முனைவர்.சுகுமாரன் நா**[1,*]

[1]உதவிப்பேராசிரியர், சமூகவியல் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.சுகுமாரன் நா — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் என்ற நாவல் பருவநிலை மாற்றத்தினை உழவுத்தொழிலின் பின்புலத்துடன் பதிவுறுத்துகிறது. தனியார் மயப்படுத்துதல் வேதிநச்சுகளை மண்ணில் உரமாக்குகின்றன. கடன் சுமை, குடும்ப உறவுகளின் முறிவு, நில இழப்பு, தலைமுறை இடைவெளி, ஓசோன்படலப் பாதிப்பு போன்ற சூழலியல் காரணிகள் உழவுத்தொழிலை பின்னலிட்டு அமைகின்றன என்ற உலகமயமாக்கல் மூன்றாம் உலகப்போரின் ஆய்வுப் பொருளாக கட்டமைக்கப்படுகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** உழவர் - சமூக இருப்பியல் – மண் – வேளாண்மை –சூழலியல் – கடன் – வட்டி – சந்தை - நில உரிமை - தலைமுறை மாற்றம் – நகரமயமாக்கல் – சமூக மதிப்பீடு – உறவு முறிவு – பயிர்க்கடன் – உற்பத்தி – உழைப்பு – பொருளாதாரம் – உறவு – பருவநிலை

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** நா, மு. (2026). மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் நாவல் சூழலியல் மாற்றத்தினால் புவி வெப்பமயமாதல் ஏற்படுவது உழவர் சமூகத்தின் வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கத்தை பதிவு செய்யும் பதிவுசெய்கிறது. உழவர்களின் பொருளாதார வாழ்க்கை, குடும்ப உறவுகள், சமூக மதிப்பு, நில உரிமை, தலைமுறை மாற்றம், வேளாண் பொருட்களின் சந்தையாக்கம், வேளாண்மைக் கடன்கள், மண்நிலை, உழவர்களின் உழைப்பு, உற்பத்தி என்ற பின்னணியில் காலநிலைகள் இணைக்கப்படுகிறது.

## உழவர் சமூக இருப்பியல் – கருத்தாக்கம்

‘சமூக இருப்பியல்’ என்பது ஒரு சமூகக் குழுவின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொருளாதார மேலாண்மை, சமூக மதிப்பீடு, உழைப்பு மற்றும் உற்பத்தி, நில உரிமை, முதலாளித்துவம், மனித உறவு நிலை, புழங்குபொருட்களின் பயன்பாடு ஆகிய பண்பாட்டுக் காரணிகளையும் சமூக மதிப்பீட்டினையும் உள்ளடக்கியது.

## மண்ணும் உழவரின் சமூக இருப்பும்

உழவரின் வாழ்க்கையின் அடிப்படை உற்பத்திக் கருவி மண் ஆகும். பொருளாதாரம், வளமை, நிலவுரிமை, ஆதிக்கம், குடும்பத்தின் வாழ்வாதாரம் சமூக அடையாளம், தலைமுறைகளின் தொடர்ச்சி என்று மண்

உழவர் சார்ந்த சமூக இருப்பியலை நிலைநாட்டுகிறது. மனித நாகரிகத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்துகிறது.

## பருவநிலை மாற்றமும் உழவர் இருப்பும்

வேளாண்மை இயற்கைச் சூழலுடன் நேரடியாகத் தொடர்புடையது. மழை, பனி, வெயில் ஆகியவை உரிய காலத்தில் உரிய அளவில் கிடைத்தால்தான் பயிர்கள் செழிக்க முடியும். நாவலில் சீனிச்சாமி கடலைப் பயிரிடுகிறார். புரட்டாசியில் மழை பெய்யும் என எதிர்பார்த்த நிலையில் கார்கால மழை பொய்த்ததால் கடலைப் பயிர் காய்ந்து போகிறது. பின்னர் நெல் விதைத்தபோது இயல்பான பனிக்காலத்திற்கு மாறாகப் பெருமழை பெய்ததால் நோய் ஏற்பட்டு பயிர்கள் அழிகின்றன. வாழை, கரும்பு, தென்னை, தக்காளி, கத்தரி, வெண்டை, சக்கரவள்ளிக்கிழங்கு, மிளகாய் போன்ற பயிர்களில் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்நிகழ்வு இயற்கை மாற்றத்தின் நேரடி பொருளாதார விளைவைக் காட்டுகிறது. பருவநிலை மாற்றம் அதனால் ஏற்படும் வெள்ளாமை பாதிப்பு, உழவர்களின் வருமான இழப்பு, மண்ணை நம்பி வாங்கிய பயிர்க் கடன் அதனை உரிய நேரத்தில் செலுத்திய இயலாது தவிக்கும் உழவர்களின் குடும்ப நெருக்கடி ஆகிய சமூக இருப்பியல் உழவர்களின் வாழ்வியலை புடமிடுகிறது.

## பயிர்க்கடன்

உழவர் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். ஒரு பருவத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட அடுத்த பருவத்தில் மீண்டும் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதற்காக அவர் கடனை நாடுகிறார். சீனிச்சாமி மனைவியின் தண்டட்டியை அடகு வைத்து கடலைப் பயிரிடுகிறார். அது அழிந்தபின் மகளின் கால் கொலுசை அடகு வைத்து நெல் பயிரிடுகிறார். பின்னர் கடன் பெற்று சோளம் விதைக்கிறார். இங்கு கவனிக்க வேண்டியது கடன் என்பது தனிநபரின் பணத்தேவையாக மட்டும் இல்லாமல் குடும்பத்தின் உடைமைகளைப் பொருளாதார ஆதாரமாக மாற்றும் செயல்முறையாக மாறுகிறது. கடன் பொருளாதார உறவை மட்டுமல்லாமல் சமூக உறவையும் பாதிக்கிறது. பொன்னுச்சாமி தொடர்ந்து ஏற்பட்ட வேளாண் இழப்புகளுக்குப் பின்னர் மகள் வீட்டு நகையை அடகு வைத்து நெல் பயிரிடுகிறார். பயிர் அழிந்தபின் நகையைத் திருப்பிக் கேட்கும் உறவினரிடம் ஏற்பட்ட அவமானம் அவரது வாழ்க்கையில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் உழவரின் பொருளாதார தோல்வி குடும்ப உறவுகளிலும் சமூக மரியாதையிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதை அறிய முடிகிறது. கடன் பெற்ற உழவருக்கு முதல்தொகையைத் திருப்பிச் செலுத்துவதோடு வட்டியும் செலுத்த வேண்டிய கட்டாயம் உருவாகிறது. கடன் வாங்குதல், வட்டி கட்டுதல், மேலும் கடன் வாங்குதல், நில அடமானம், குடும்பத்தில் ஏற்படும் அவமானம், உறவு நிலை பாதிப்பு ஆகியவை கடன் வழியலான உழவர்களின் சமூக மதிப்பீட்டை அடையாளப்படுத்துகிறது.

## விலை ஏற்றம்

உழவர் உற்பத்தி செய்யும் பொருளுக்கான இறுதி விலையை அவரே நிர்ணயிக்க முடியாத நிலை நாவலில் பதிவு செய்யப்படுகிறது. போக்குவரத்து, விளம்பரம், சந்தைப்படுத்துதல் போன்றவை வேளாண் பொருட்களின் வணிகச் சங்கிலியில் இணைகின்றன. இதனால் உழவர்

உற்பத்தி செய்த பொருளுக்கும் சந்தையில் கிடைக்கும் விலைக்கும் இடையே முரண்பாடு ஏற்படுகிறது. இதன் விளைவாக உழைப்பின் மதிப்பு மற்றும் உற்பத்தியின் பொருளாதாரப் பயன் ஆகிய இரண்டிற்கும் இடையே இடைவெளி உருவாகிறது. வேளாண் உற்பத்தியில் விதை, உரம், பூச்சிக்கொல்லி, நீர், தொழிலாளர் செலவு போன்றவை முக்கியமான இடுபொருட்களாகின்றன. வாழைச் சாகுபடியை எடுத்துக்காட்டாகக் கொண்டு, ஒரு வாழைத்தாருக்கான இடுபொருள் செலவு ரூபாய் பதினாறு என்ற நிலையில் அதன் விற்பனை விலை ரூபாய் பதினைந்து என நாவலில் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தி செய்த அளவு அதிகரித்தாலும் இலாபம் உறுதியாகாது என்பதைக் காட்டுகிறது.

## நில விற்பனை – சமூக இருப்பின் முறிவு

உழவரின் வாழ்க்கையில் நிலம் மிக முக்கியமான சொத்தாக உள்ளது. ஆனால் தொடர்ந்து ஏற்படும் கடன் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலத்தை விற்கும் முடிவை நோக்கி உழவரைத் தள்ளுகிறது. “நெலத்த வித்து பேங்குல போட்ட வட்டிக் காசுல வாழ்க்கை நடத்து” என்ற நாவல் வரி நில விற்பனைக்குப் பின்னால் உள்ள பொருளாதார நெருக்கடியை வெளிப்படுத்துகிறது. (மூ.உ.போ. ப.182). இங்கு நில விற்பனை என்பது வெறும் சொத்து மாற்றமாக இல்லாமல் உழவர் வாழ்க்கையின் அடித்தளத்திலிருந்து விலகுதலாக அமைகிறது.

## நில உரிமையும் அதிகார உறவுகளும்

நிலத்தின் மீது பொருளாதார அதிகாரம் கொண்டவர்களுக்கும் ஏழை உழவர்களுக்கும் இடையே சமமற்ற உறவு காணப்படுகிறது. மிரட்டல், முன்பணம், போலிப் பத்திரம் போன்ற வழிமுறைகளால் ஏழை விவசாயிகளின் நிலங்கள் கையகப்படுத்தப்படுவதாக ஆவணம் சுட்டுகிறது. (மூ.உ.போ. ப.375). இதனால் நில உரிமை என்பது பொருளாதாரப் பிரச்சினையோடு அதிகார உறவின் பிரச்சினையாகவும் வெளிப்படுகிறது.

## நகரமயமாக்கலும் உழவுத் தொழிலின் மதிப்பும்

நகரமயமாக்கலின் தாக்கத்தால் உழவுத் தொழிலின் சமூக மதிப்பீட்டிலும் மாற்றம் ஏற்படுகிறது. களை பறித்தல், ஏரோட்டல், நீர்ப்பாய்ச்சல் போன்ற பாரம்பரிய வேளாண் அறிவுகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாமல் போகும் நிலை உருவாகிறது. நாவலில், “நம்ம ஊர்ல விவசாயம் விவசாயம் மாதிரி ஒரு தொழிலும் இல்ல. அது மாதிரி ஒரு துன்பமும் இல்ல.” என்ற வரிகள் இடம்பெறுகின்றன. (மூ.உ.போ.ப.68). இந்தக் கூற்று உழவுத் தொழிலின் பெருமைக்கும் அதன் துன்பத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் காட்டுகிறது.

“உலகப்போர்களின் எச்சம் தான் இந்த உரங்கள், முதல் உலகப் போரில் 8 இலட்சம் சிறைக்கைதிகளைக் கொல்ல “அமோனியா” நச்சுப்புகை பயன்படுத்தப்பட்டது. உலகப்போர் முடிந்ததும், அதுவே பூச்சிக்கொல்லி மருந்தாக புது அவதாரம் எடுத்தது.” (என் தம்பி வைரமுத்து கலைஞர் சொற்பொழிவுகள், ப.217) என்ற வேதிநச்சு உரங்களின் பெருக்கத்தை காட்டுகிறது.

## தலைமுறை இடைவெளி

உழவர் சமூகத்தின் தொடர்ச்சிக்கு வேளாண் அறிவு தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கடத்தப்படுவது முக்கியமானதாகும். ஆனால் உழவுத் தொழிலின் பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அடுத்த தலைமுறை வேறு தொழில்களை நோக்கிச் செல்லும் மனநிலை உருவாகிறது. இதனால் பாரம்பரிய வேளாண் தொழில்நுட்ப அறிவின் தொடர்ச்சியில் இடைவெளி ஏற்படுகிறது. இதனை “தொழில் மாற்றம்” மட்டுமல்ல “சமூக அறிவு மாற்றம்” என்றும் புரிந்துகொள்ளலாம்.

## உழவுத் தொழிலும் சமூக உற்பத்தியும்

உழவுத் தொழில் தனிப்பட்ட உழவரின் வாழ்வாதாரமாக மட்டும் அமையவில்லை. அதனைச் சார்ந்த பல சமூக மற்றும் பொருளாதார உறவுகள் உருவாகின்றன. உற்பத்தி, தொழிலாளர், போக்குவரத்து, சந்தைப்படுத்துதல் வணிகம் ஆகியவை உழவோடு தொடர்புடையவை. உழவுத் தொழில் சமூக இயக்கத்திற்கும் பொருளாதார உற்பத்திக்கும் அடிப்படையாகக் குறிப்பிடுகிறது. எனவே உழவர் சமூகத்தின் நெருக்கடி என்பது தனிப்பட்ட விவசாயியின் நெருக்கடியாக மட்டும் பார்க்கப்பட முடியாது.

## முடிவுரை

மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல் என்பது மண் மற்றும் உழைப்பை மையமாகக் கொண்ட வாழ்வியலிலிருந்து பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளால் மாற்றமடையும் வாழ்க்கை நிலையாக வெளிப்படுகிறது. மண் உழவரின் உயிராதாரமாக இருக்கிறது. ஆனால் பருவநிலை மாற்றம் பயிரை அழிக்கிறது. பயிர் இழப்பு கடனை உருவாக்குகிறது. கடன்சுமை, நில அபகரிப்பு, உறவு முறிவு, உழவரின் பாரம்பரிய சமூக அடையாளத்தையே பாதிக்கிறது. இதனுடன் நகரமயமாக்கலும் தலைமுறை இடைவெளியும் இணைந்து உழவுத் தொழிலின் எதிர்காலத் தொடர்ச்சியைச் சிக்கலாக்குகின்றன. நச்சுவேதிப் பொருட்கள், கடன், விலை ஏய்ப்பு, விலை அதிகரிப்பு ஆகியவை உழவுத் தொழிலிலிருந்து வேறு தொழிலுக்குச் செல்லும் தலைமுறை மாற்றத்திற்கு வழிவகுப்பதாகக் குறிப்பிடுகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. வைரமுத்து, மூன்றாம் உலகப்போர், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 13 ஆம் பதிப்பு, 2015
2. என் தம்பி வைரமுத்து, கலைஞர் சொற்பொழிவுகள், சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்., சென்னை, வெளியீடு, இரண்டாம் பதிப்பு, ஜனவரி, 2013
3. இராஜேஸ்வரி, ம. ”மூன்றாம் உலகப்போர் நாவலில் சூழலியல் விழுமியங்கள்” சர்வதேச தமிழ் ஆய்விதழ், தொகுதி 4, சிறப்பிதழ் 7, 2022
4. க.நவநீதக்கண்ணன், ”மூன்றாம் உலகப்போர் புதினம் காட்டும் சுற்றுச்சூழல் மாசுபாட்டில் பன்னாட்டு அரசியல்” தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி – 8, சூலை-2025

© 2026 முனைவர்.சுகுமாரன் நா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..